சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 68/2022**

2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியமாகிய **சந்திரகலா PW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **சந்திரகலா** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெயர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

20.06.2024

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 01.10.2018. தேதியிட்ட 1ம் வாதியின் கணவர் குணசேகரனுக்கும், பிரதிவாதிக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட அடமான வர்த்தமானம் அசல் **வா.சா.ஆ-1** ஆகும். 15.03.2020 தேதியிட்ட 1ம் வாதியின் கணவர் குணசேகரன், பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி வர்த்தமானம் அசல் **வா.சா.ஆ-2** ஆகும். 10.03.2021 தேதியில் 1ம் வாதியின் கணவர் குணசேகரன் இறந்ததற்கான இறப்பு சான்று இணையதள நகல் **வா.சா.ஆ-3** ஆகும். 19.03.2023 தேதியிட்ட இறந்து போன குணசேகரனுக்கு நாகப்பட்டினம் வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ-4** ஆகும். 13.05.2022 தேதியிட்ட 1ம் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ-5** ஆகும். 18.05.2022 தேதியிட்ட 1ம் வாதி கொடுத்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **வா.சா.ஆ-6** ஆகும். எனது வழக்கை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**(பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)**